DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.1

Name : **திரு.ஜெய்லானி** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 19.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை**

1. நான் டி.வி. கே.கே. நகர், நாகம்மாள் கோவில் தெரு, போடியில் குடியிருந்து வருகிறேன். காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். இறந்து போன அபிபுல்லா எனது மைத்துனர், எனது தங்கையின் கணவர். எனது தங்கையின் பெயர் அனீஸ் பாத்திமா. அவர்தான் இந்த வழக்கில் 1வது எதிரி, மற்றொரு எதிரியான ஜெயபாண்டி 1வது எதிரியுடன் கள்ளத்தொடர்பில் இருந்து வருகிறார். எனது மைத்துனர் இறந்து போன அபிபுல்லா எலுமிச்சை கமிஷன் கடை நடத்தி வந்தார், அவருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளார்கள். முதல் எதிரியின் மகன் ஃபாசித் ரகுமான் கோவையில் ஒரு கம்பெனியில் வேலை செய்து வருகிறார். முதல் எதிரியின் மகள் பெயர் நிஷா பானு MBA பயின்று வருகிறார், அவர்கள் இருவரும் என்னுடனும், எனது அம்மாவுடனும் வசித்து வருகிறார்கள். நாங்கள் தான் அவர்களை பராமரித்து வருகிறோம். முதல் எதிரியான அனீஸ் பாத்திமா எனது தங்கை போடியில் அமைந்துள்ள ரோட்டில் 2018 –ம் ஆண்டு பெட்டிக்கடை நடத்தினார்.

2. 2018 ஆம் ஆண்டிலிருந்து இறந்து போன எனது மைத்துனர் மது அருந்த ஆரம்பித்தார். நான் அவரை ஏன் குடிக்கிறீர்கள் என கேட்ட போது தனது

மனைவியான எனது தங்கையின் நடவடிக்கை சரியில்லை என என்னிடம் தெரிவித்தார். நான் அதை நம்பவில்லை 2019 ஆம் ஆண்டு இது நடந்தது. 2019 ஆம் ஆண்டு இவ்வாறு என்னிடம் இறந்து போனவர் தெரிவித்தார் நான் நம்பாத காரணத்தினால் தனது வீட்டிற்கு இரவு 2:30 மணிக்கு வந்து பார்க்குமாறு என்னிடம் தகவல் தெரிவித்தனன் பேரில் நான் அவர்கள் வீட்டுக்கு சென்று பார்த்தபோது 1ம் எதிரி அனீஸ் பாத்திமா வீட்டில் 2–ம் எதிரி ஜெயபாண்டி அவருடன் தனிமையில் இருந்ததை நான் பார்த்தேன். நான் பார்த்து சத்தம் போட்டவுடன் 2ம் எதிரி ஜெயபாண்டி அந்த வீட்டிலிருந்து ஓடி விட்டார். நான் 1ம் எதிரியை அடித்து விட்டேன், இது நடந்தது 10 வது மாதம் 12 ஆம் தேதி 2019 ஆம் வருடம். நான் 1–ம் எதிரியை அடித்தது தொடர்பாக அவர் எனக்கு எதிராக போடி டவுன் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்திருந்தார். பின்னர் போலீசார் எங்களை அழைத்து விசாரணை செய்தார்கள். அவர்கள் பிரச்சனைக்கு நான் செல்லக்கூடாது என்று போலீசார் என்னை அறிவுரை சொல்லி அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு நான் அவர்கள் வீட்டு பக்கம் செல்வது கிடையாது.

3. 13.10.2019 –ம் தேதியன்று எனது மைத்துனர் எனக்கு போன் செய்து தான் அருந்தும் உணவில் தனக்கு ஏதோ வாடை வருவதாக என்னிடம் புகார் தெரிவித்தார். நான் அவர்கள் வீட்டிற்கு சென்று பார்த்தபோது ரேஷன் அரிசி என்றால் அவ்வாறு தான் வாடை வரும் என சொன்னேன். நான் கடையில் சாப்பாடு வாங்கி கொடுத்துவிட்டு வந்து விட்டேன். கடந்த 10.11.2019 –ம் தேதியன்று காலையில் எனது மைத்துனர் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக நகர காவல் நிலையத்திற்கு நான் சென்று புகார் தெரிவித்தேன். எனது மைத்துனர் இறந்ததில் எனக்கு சந்தேகம் இருப்பதாக தெரிவித்தேன். அவர்கள் எனது மைத்துனரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு எனது மைத்துனரின் பிரேதத்தை நல்லடக்கம் செய்தோம்.

4. எனது மைத்துனர் இறந்த தினம் அன்று எனது தங்கையான 1ம் எதிரியும், 2–வது எதிரியும் ஊரில் இல்லை, இருவரும் வெளியில் சென்று விட்டார்கள். அன்றைய தினம் எனது மைத்துனரின் கேதத்தில் அவர்கள் இல்லை. போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் முன்பு என்னை அழைத்து விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை வழக்கு தொடர்பாக இரண்டு முறை விசாரணை செய்தார்கள். எனது தங்கையான 1ம் எதிரியும், 2–ம் எதிரி ஜெயபாண்டியன் தான் எனது மைத்துனர் இறந்ததற்கு முழு காரணம். அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த கள்ளத்தொடர்பு காரணமாக அவர்களுக்கு இடைஞ்சலாக இறந்து போன எனது மைத்துனர் இருந்ததால் அவர்கள் இருவரும் சேர்ந்து எனது மைத்துனருக்கு ஸ்லோ பாய்சன் கொடுத்து அவரை இறக்கச் செய்துள்ளார்கள். 19ஆம் தேதி எனது மைத்துனர் இறந்த தினத்தன்று அவர்கள் இருவரும் சேர்ந்து கொலை செய்துவிட்டு அங்கிருந்து ஓடி விட்டார்கள். தற்பொழுது எதிரிகள் இருவரும் ஓம் சக்தி கோயில் தெருவில் ஒன்றாக வசித்து வருகிறார்கள். அவர்கள் போடியில் வசித்து வருகிறார்கள் நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் தான் அ.சா.ஆ.1, நீதித்துறை நடுவர் முன்பு நான் வாக்குமூலம் அளித்துள்ளேன் அந்த வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்துக்கள் அ.சா.ஆ.2, ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

<u>(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை சாட்சி விசாரணை 04.11.2025–ம் தேதியன்று உத்தரவிடப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் அவகாசம் வழங்கப்படும் இன்று எதிரிகள் தரப்பு வழக்கு ஆஜரில்லை என்பதால் என்பதால் இலவச சட்ட உதவி மையத்திலிருந்து இலவச சட்ட உதவி வழக்கறிஞரை (LADCS) எதிரிகளுக்கு நியமிக்கப்பட்டு இலவச சட்ட உதவி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை)</u>

1. புகார் கொடுக்க நான், எனது தாயார் எனது தங்கையின் மகன் மற்றும் மகள் ஆகிய நால்வரும் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம். நான் தான் புகார் தெரிவித்தேன். புகார் கொடுக்கும் போது காலை 9.00 மணி இருக்கும். முதல் நாள் வரை எனது மைத்துனர் எலுமிச்சை வியாபாரம் செய்து வந்தாரா என்றால் அவர் நிட்பாட்டி விட்டார். பெட்டிக்கடை வியாபாரம் பார்த்து வந்தார். நான் எனது மைத்துனரை 12 ஆம் தேதி 10–வது மாதம் 2019 ஆம் தேதியன்று நேரில் சந்தித்து ஏன் அதிகமாக மது அருந்திர்கள் என்று விசாரித்தேன். திருமணத்திற்கு முன்பு இருந்தே எனது மைத்துனர் குடிப்பழக்கம் கொண்டவர் என்றால் சரியல்ல.

2. 2018 ஆம் ஆண்டிலிருந்து அவர் மீண்டும் குடிக்க ஆரம்பித்தார். அந்த குடிப்பழக்கம் அதிகம் இருந்து வந்த காரணத்தினால் எனது தங்கைக்கும், அவரது கணவரான எனது மைத்துனருக்கும் அடிக்கடி குடும்ப பிரச்சினை ஏற்படும் என்றால் சரிதான். எனது மைத்துனர் சொல்லி நான் அவரது வீட்டிற்கு இரவு 02.30 மணிக்கு சென்று பார்த்ததாக சொல்லும் நிகழ்வை இரண்டு முறை போலீசார் என்னை விசாரித்த போதும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மைத்துனர் இறந்த பிறகு நான் கொடுத்தது ஒரே புகார் தான். அதற்கு முன்பு நான் புகார் எதுவும் கொடுத்ததில்லை.

3. நான் கூறுவது போல எனது மைத்துனரை நான் சந்தித்து பேசியதில்லை என்றும், அவரும் என்னிடம் எந்த புகார் எதிரிகள் குறித்தும் சொன்னதில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் உண்மையிலேயே அந்த மைத்துனரை சந்தித்து பேசி இருந்தால் எதிரிகளுக்கு எதிராக நான் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்து இருப்பேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரிலும் எனது சகோதரியான 1ம் எதிரி 2–ம் எதிரி உடன் தொடர்பில் இருந்ததாக நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1–ம் எதிரியும், 2–ம் எதிரியும் சட்டவிரோதமாக தொடர்பில் இருந்ததாக கூறும் சங்கதி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. அவ்வாறு உண்மையிலேயே இருந்திருந்தால்

இறந்து போன எனது மைத்துனரே எதிரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் சரியல்ல. வயதுக்கு வந்த பெண் வீட்டில் இருப்பதால் அசிங்கமென்று எனது மைத்துனர் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்துள்ளார்.

4. எனது மைத்துனருடன் எனது அம்மா மற்றும் சகோதரி ஒன்றாக தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. இந்த விஷயம் கேள்விப்பட்டவுடன் எனது அம்மா அவர்களுடன் குடியிருக்கவில்லை. எனது மருமகளையும், எனது அம்மாவையும் நாங்கள் எனது வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டோம். நான் எனது அம்மாவை எனது வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு வரை எனது அம்மா எதிரியின் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். எனது மைத்துனர் அதிக குடி காரணமாக அவரது உடல் நிலையை பாதிப்பு ஏற்பட்டு அவருக்கு TB நோய் வந்து தான் அவர் இறந்து போனார் என்றால் சரியல்ல. TB நோய் இருந்த காரணத்தினால் தான் எனது மைத்துனர் மது அருந்துவதை நிறுத்தினார், அதன் பிறகு சிகிச்சை எடுத்து நன்றாக தான் இருந்தார்.

5. எனது சகோதரி இல்லாத சமயங்களில் எனது அம்மாவும் உணவு வழங்குவது உண்டு என்றால் சரிதான், ஆனால் உணவு பரிமாறுவது 1–ம் எதிரி தான். நான் கூறும் புகார் தொடர்பாக ஜமாத்திலோ, பஞ்சாயத்தார்களிடமோ முறையிடவில்லை என்றால் சரிதான். எந்தவிதமான பாய்சன் கொடுத்தார் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மைத்துனர் இறப்பதற்கு முன்பாகவே எனக்கும், சகோதரிக்கும் குடும்பம் சம்பந்தமாக பிரச்சனைகள் இருந்து காவல் நிலையம் வரை நாங்கள் சென்றிருந்தோம் என்றால் சரிதான். நான் முதல் எதிரியிடம் வீட்டில் வயதுக்கு வந்த பெண்மணி இருப்பதால் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று பலமுறை அறிவுரை சொல்லியும் முதல் எதிரி திமிராக உன்னால் எதுவும் செய்ய முடியாது என என்னிடம் பிரச்சனை செய்தார், அதன் காரணமாகவே நான் 1–ம் எதிரியை அடித்தேன்.

6. எனக்கும், எனது மைத்துனரின் குடும்பத்திற்கும் சம்பவத்திற்கு முன்பே பிரச்சனை இருந்து வந்தது என்றும், அது தொடர்பான மன உளைச்சல் காரணமாகவே எனது மைத்துனர் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. போலீசாரின் ஆதரவுடன் எனது சகோதரிக்கு எதிராக இந்த பொய்யான குற்றச்சாட்டு புனைந்துள்ளோம் என்றால் சரியல்ல.போலீசார் என்னை முதலில் விசாரிக்கும் போது எனது மைத்துனர் எப்படி இறந்தார் என்ற விவரமே தெரியாது என நான் சொல்லிவிட்டு இரண்டாவது முறை விசாரிக்கும் போது தான் எதிரி கொடுத்த விஷத்தின் காரணமாக எனது மைத்துனர் இறந்து போனதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஸ்லோ பாய்சன் கொடுத்திருப்பார் என்று சந்தேகத்தில் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

7. இந்த புகாரில் சாட்சி கையெழுத்து போட்டு இருந்தவர்கள் உண்மையிலேயே கையெழுத்து போடவில்லை என்றும் வழக்குக்காக அவர்களது கையெழுத்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் கூறுவது போல் எதிரிகள் 1 மற்றும் 2 கள்ளத்தொடர்பில் இருந்திருந்தால் குறுகிய நேரத்தில் அது சம்பந்தமாக போலீசார் நடவடிக்கை எடுத்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. எனது சகோதரி மீது இருந்த வன்மத்தின் காரணமாக அவர் மீது இந்த பொய்யான குற்றச்சாட்டு கூறி அதற்கு ஒத்தார் போல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.19 15:57:06 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.